ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2113/68 – 2019 මාර්තු මස 08 වැනි සිකුරාදා – 2019.03.08

*2113/68 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**தென் மாகாண மாகாண சபை**

*2019 ஆம் ஆண்டின் .............. ஆம் இலக்கமுடைய உடைய பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தின் சாசன வரைபு*

தென் மாகாண விளையாட்டு அமைச்சர் ஹேவா கம்பலகே மனோஜ் சிறிசேன ஆகிய நான், இதன் மூலம் பிரசுரிக்கப்படும் 2019 ஆம் ஆண்டின் ........... ஆம் இலக்கமுடைய தென் மாகாண மாகாண சபையின் பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தின் சாசன வரைபு இந்த வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து இரண்டு வாரங்கள் முடிவடைந்த பின்னர் தென் மாகாண சபைக்கு சமர்ப்பிப்பதாக இதன் மூலம் அறியத்தருகின்றேன். எவரெனுமொருவருக்கு இந்த சாசனத்தில் உள்ளடக்கப்பட்ட ஒழுங்குகள் தொடர்பாக சமர்ப்பிப்பதற்கு ஏதேனும் விடயங்கள் அல்லது திருத்தங்கள் இருந்தால் அந்த விடயம் அல்லது திருத்தத்தை அந்த காலகட்டத்துக்குள் எனக்குக் சமர்ப்பிக்க முடியும்.

எச். ஜீ. மனோஜ் சிறிசேன,
விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார, கிராமிய
கைத்தொழில், கிராம அபிவிருத்தி, பொருளாதார மேம்பாடு,
சமூகசேவை நல்லொழுக்கம், பிள்ளைகள் பாதுகாப்பு,
மகளிர் விவகார, வீடு மற்றும் கட்டிடம், மனித
வலு வேலை வாய்ப்பு அமைச்சர்.
தென் மாகாண மாகாண சபை.

தென் மாகாண விளையாட்டு அமைச்சு அலுவலகம்,
காலி,
*2019, பெப்புருவரி 01.*

1A - PG4417- 10 (2019/03)

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**தென் மாகாண மாகாண சபை**

*2019 ஆம் ஆண்டின் ................ ஆம் இலக்க பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தின் சாசன வரைபு*

தென் மாகாணத்தின் பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையம் பதிவு செய்தல் மேற்பர்வை செய்தல், அபிவிருத்தி செய்தல், நிருவாகம் செய்வதற்காக ஏற்பாடுகள் செய்வதற்காக மற்றும் அது தொடர்பான அல்லது அதற்கு தொடர்புடைய வேறு விடயங்களுக்காக ஏற்பாடுகள் வழங்குவதற்கு சட்டரீதியான சட்ட வரைபு.

**இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் தென் மாகாண மாகாண சபை இவ்வாறு விதிக்கப்படுகின்றது**

*குறுகிய பெயர் மற்றும் செயற்படுத்தும் திகதி.*

1. இந்த சட்ட சாசன வரைபு தென் மாகாண மாகாண சபையின் 2019 ஆம் ஆண்டின் ................. ஆம் இலக்கம் உடைய பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தின் சாசன வரைபு ஆக அறிமுகப்படுத்தப்படுவதோடு அது (இனி மேலும் ''செயல்படுத்தும் திகதி'' யாக அறிமுகப்படுத்தும்) தென் மாகாண கௌரவ ஆளுனர் அவர்களின் அங்கீகாரம் பெற்ற திகதியில் இருந்து செயற்படுத்தப்படும்.

*சாசனத்தின் குறிக்கோள்.*

2. இந்த சாசனத்தின் நோக்கங்கள் கீழ் குறிப்பிட்டவாறு இருத்தல் வேண்டும்.

(அ) (இனிமே மலும் ''பகலில் சிறுவர் பராமரிக்கும் மத்தியஸ்தானம்'' என்று அறிமுகம் செய்யப்பட்ட) நான்கு மாத வயதிலிருந்து பன்னிரண்டு வயது வரையிலான பிள்ளைகளுக்கு தன்னுடைய வீட்டின் வெளியே ஏதேனும் நேரத்திற்குள் பாதுகாப்பு வழங்கல் மூலம் பிள்ளைகளின் பாராமரிப்பு மற்றும் வளர்ச்சிக்காக பெற்றோருக்கு ஆதரவு கொடுக்கும், மாகாணத்தில் பகலில் பாதுகாப்பு நிலையம் தொடர்பான சம்பூரண மேற்பார்வை நடாத்திச் செல்லுவதற்கு பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையம் இருக்கும் நேரத்திற்க்குள் பிள்ளைகளின் சம்பூரண பொறுப்பை ஏற்றுக் கொள்ளலும், மற்றும்

(ஆ) மாகாணத்திற்குள் பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தில் குழந்தைகளின் உடல் மற்றும் மன வளர்ச்சிக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்குதல்.

## I ஆம் பிரிவு

**செயற்பாட்டுக் குழுவை நிறுவுதல், அதிகாரம் மற்றும் செயற்பாடுகள்**

*செற்பாட்டுக் குழு நிறுவுதல்.*

3. (இதன்மேல் ''குழு'' என்று அறிமுகப்படுத்தப்பட்ட) செயற்பாட்டுக் குழு சாசனத்தை நடைமுறையை மேன்படுத்தும் செயல்களுக்காக நிறுவப்பட வேண்டும்.

*குழுவின் அமைப்பு பதவிக்காலம் .*

4. (1) குழுக்கள் பின்வருவோரைக் கொண்டமைதல் வேண்டும்

(அ) அதிகார பூர்வமாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்களான

(i) தலைவராக இருக்க வேண்டும், மாகாணத்தில் சமூக நலம், நன்னடத்தை மற்றும் பிள்ளை பராமரிப்பு சேவைகள் ஆகியவற்றின் விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சின் செயலாளர் பதவியிலிருந்து

(ii) செயலாளராக இருக்க வேண்டும் மாகாணத்தில் சமூக நலம் நன்னடத்தை மற்றும் பிள்ளை பராமரிப்பு சேவை திணைக்களத்தின் ஆணையாளர் பதவியிலிருந்து

(iii) மாகாணத்தில் உள்ளூராட்சி ஆணையாயளர் பதவியிலிருந்து

(iv) மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் பதவியிலிருந்து

(v) மாகாண கல்விப் பணிப்பாளர் பதவியிலிருந்து

(vi) பிரதி/உதவி பிள்ளை பராமரிப்பு சேவை ஆணையாளரின் பதவியிலிருந்து

(vii) பிரதி/உதவி சமூக நலம் நன்னடத்தை பணிப்பாளர் பதவியிலிருந்து

(viii) காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்ட மூன்றிலும் சிரேஷ்ட நன்னடத்தை உத்தியோகத்தர் பதவியிலிருந்து

(ix) காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டம் மூன்றிலும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள் மூன்று பேர்களிலும்

(x) காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டம் மூன்றிலும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள் மூன்று பேர்களிலும்

(ஆ) (இனிமேலும் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" என்று குறிப்பிடப்படுவது) (இனிமேலும் அமைச்சர் என அழைக்கப்படுவது) மாகாணத்தில் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரால் நியமிக்கப்பட வேண்டிய மூன்று நபர்கள் இருக்க வேண்டும்.

(2) ஒரு நபர்

(அ) உள்ளூராட்சி தாபனத்தற்காக மக்களால் தேர்வு செய்யப்பட்ட அல்லது வேறு முறையில் நியமிக்கப்பட்ட உறுப்பினர் அல்லது

(ஆ) இலங்கை அல்லது வேறு எந்த நாட்டின் சட்டத்தின் கீழ் அல்லது தெளிவற்ற நபராக தீர்மானம் செய்யப்பட்ட அல்லது வெளியிப்படுத்தப்பட்டால் அல்லது

(இ) இலங்கை அல்லது வேறு எந் நாட்டிலும் பொருந்தும் ஒரு சட்டத்தின் கீழ் இலங்கை அல்லது வேறு எந்த நாட்டில் நீதி மன்றத்தால் விதிக்கப்பட்ட சிறையில் அடைக்கப்பட்டிருந்தால் அல்லது பாதிக்கப்பட்டால்

(ஈ) இலங்கையில் அல்லது வேறு எந்த நாட்டிலும் பொருந்தும் ஒரு சட்டத்தின் கீழ் வங்குரோது Bankruptcy அல்லது நொடிந்த நிலை அறிவிக்கப்பட்டுள்ள எவரேனும் இருந்திருந்தால் அல்லது

(உ) குழுவின் உறுப்பினராக அவரது பணியை செயல்படுத்துவதற்கு தீங்கு விளைவிக்கும் எந்தவொரு நிதி அல்லது பிற உறவு இருந்தால் அவர் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்து செயல்படுத்துவதற்கு தகுதியற்றவர் ஆவார்.

(3) உத்தியோகபூர்வமாக தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு உறுப்பினரும் அவர் சபையின் உறுப்பினராக இருந்தது எந்த பதவி அடிப்படையிலோ அந்த பதவி வகிக்கும் காலத்தில் சபையில் பதவி வகிக்க வேண்டும்.

(4) (அ) நியமிக்கப்பட்ட சகல உறுப்பினர்களால் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு உறுப்பினரும் அவர் மரணமடைதல் ராஜினாமா செய்வார்கள் அல்லது பதவி நீக்கம் செய்தல் காரணமாக அந்த பதவி முன் வெற்றிடமாக இருந்தால் மாத்திரம் அந்த பதவிக்கு நியமிக்கப்பட்ட தேதி இருந்து மூன்று ஆண்டுகள் பதவி வகிக்க வேண்டும். அவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டால் மாத்திரம் மீண்டும் நியமிப்பதற்கு தகுதியுள்ளவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) அமைச்சரால் அவ்வாறு செய்வது பொருத்தமானது என கருதும் போது காரணம் காட்டி நியமிக்கப்பட்ட உறுப்பினர் அலுவலகத்திலிருந்து நீக்கப்படலாம்.

(இ) நியமிக்கப்பட்ட ஒரு உறுப்பினரால் அமைச்சருக்கு பதிவு தபால் மூலம் அனுப்பப்படும் கடிதம் மூலம் எந்த சந்தர்ப்பத்திலும் பதவியில் இருந்து கேட்டு விலக முடியும்.

(ஈ) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் இறப்பு, பதவி விலகல் அல்லது பணி நீக்கம் ஆகியவற்றின் காரணமாக பதவியில் வெற்றிடமாக உள்ள சந்தர்ப்பத்தில் அமைச்சரால் (ஆ) பந்தியின் ஏற்பாடுகளை கவனத்தில் கொண்டு அந்த நபரின் இடத்தில் எவரையும் நியமிக்கலாம் அவ்வாறு நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர் தனக்கு பதிலாக உள்ள உறுப்பினரின் பதவிக்காலம் காலாவதியாகி விடக்கூடிய காலப்பகுதிக்காக பதவி வகிக்க வேண்டும்.

5. சபையின் எந்த நடவடிக்கையும் தீர்மானம் அல்லது சட்ட வாரியங்களின் செயல்கள் வெற்றிடம் அல்லது அங்கு உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் தவறான நடத்தைக்கான காரணம் என்றால் மாத்திரம் அதன் உறுப்பினர்கள் என கருதப்படக்கூடாது எனக் கருதப்படமாட்டாது. வெற்றிடம் கரணமாக இரக்க மற்றவை.

6. சபையின் உறுப்பினருக்கு ஆளுனர் அவர்களின் அங்கீகாரத்துடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படும் ஊதியம் வழங்கப்படலாம். குழு உறுப்பினர்கள் ஊதியம், நிர்வாக குழுக் கூட்டங்கள்.

7. (1) குறைந்த பட்சம் மூன்று மாதங்கள் வரை சபையின் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும். என்றாலும் சபை விசேட கூட்டம் அழைக்கப்பட வேண்டும் என்று அமைச்சரால் அல்லது கீழ்படிவுள்ள குழுவின் உறுப்பினர் ஐந்து பேர் ஆவது சபையின் செயலாளரிடம் வேண்டுகோள் கொடுக்கப்பட்டிருந்தால் அந்த கோரிக்கையின் திகதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் அவரால் சபையின் விசேட கூட்டத்திற்கு அழைக்கப்பட வேண்டும்.

(2) சபையின் செயலாளரால் சபையின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் கூட்டத்திற்கு ஏழு நாட்களுக்கு முன் கூட்டம் சம்பந்தமாக எழுத்து மூலம் அறிவிக்கப்பட வேண்டும்.

(3) ஏதேனும் கூட்டத்திற்கு உறுப்பினர் ஏழு பேர் ஆவது இருத்தல் வேண்டும்.

(4) தலைவர் சபையின் கூட்டத்திற்கு தலைமை தாங்க வேண்டும். சபையின் கூட்டத்திற்கு தலைவர் சமுகமளிக்காத பட்சத்தில் வருகை தந்திருக்கும் உறுப்பினர்களில் ஒருவர் அந்த கூட்டத்தில் தலைமை தாங்குவதற்திற்காக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

(5) சபையின் ஏதேனும் கூட்டத்தில் தேர்தல் சம்பந்தமாக சமத்துவம் ஏற்பட்டால், கூட்டத்தில் தலைமை வகிக்கும் நபர் தேர்தலுக்கு மேலதிகமாக தீர்வு வாக்கு வைக்க வேண்டும்.

(6) இந்த சாசனத்தின் ஏற்பாடுகளின் கீழ் கூட்டத்தின் செயற்பாடு முறைமை மற்றும் அந்த கூட்டத்தின் செயற்பாடுகளை செய்வதற்கு சபையால் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.

சபையின் தொழிற்பாடு.

8. சபையினால் பின்வரும் தொழிற்பாடுகளை நிறைவேற்ற வேண்டும் :

(அ) பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தின் தரத்தை உயர்த்துவதற்காக தேவையான வழிகாட்டி மற்றும் தேவையான ஆதரவை பெற்றுக் கொடுத்தல்;

(ஆ) பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்திற்காக தேவையான குறைந்த பட்ச தர நிலை விதித்தல்;

(இ) பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தின் பெண் பொறுப்பாளருக்கு இருக்க வேண்டிய குறைந்த பட்ச கல்வித் தகைமை மற்றும் தொழில் சம்பந்தமான தகுதி விதித்தல்;

(ஈ) விசேட தேவைகள் உள்ள குழந்தைகளுக்காக பாதுகாப்பு வழங்கும் போது தேவையான தர நிலை உடையவர்களை நியமித்தல்;

(உ) இந்த சாசனத்தின் குறிக்கோளை செயற்படுத்துவதற்கு தேவையான ஒழுங்குகளை செய்தல்.

## II ஆம் பகுதி

### பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையம் அமைத்தல்

பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையம் பதிவு செய்வதற்கு விண்ணப்பபித்தல்

9. (1) இப்போது வரையறுக்கப்பட்டுள்ள பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தின் செயலாளரால் அந்த பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தை பதிவு செய்வதற்காக உரிய படிவத்திலுள்ள விண்ணப்பப்பத்திரத்தை ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(2) (1) ஆவது பந்தியின் கீழ் பதிவு செய்வதற்காக விண்ணப்பித்திருக்கும் அனைத்து பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையம் இந்த சாசனத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதா என்பதை கருத்தில் கொண்டு செயல்களுக்காக தேவை ஏற்படும் சந்தர்ப்பத்தில் ஏதேனும் தகவல் அல்லது ஆவணங்களை ஆணையாளரால் விண்ணப்பதாரர்களிடம் கோரல் முடியும்.

பதிவு செய்வதற்கான தேவைகள்.

10. (1) பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையங்கள் நடாத்திச் செல்லும் செயல்களுக்காக (இனி மேல் "குழு" என்று அறிமுகப்படுத்தப்பட்ட) தலைவர் உப தலைவர், செயலாளர், உப செயலாளர், பொருளாளர் என்ற பதவிகள் கொண்ட நிர்வாக குழு இருத்தல் வேண்டும்.

(அ) ஒரு நபர்

(i) உள்ளூராட்சி தாபனத்திற்காக மக்களின் வாக்கு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர், அல்லது ஒரு பொது அதிகாரியால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் என்றால் அல்லது;

(ii) நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் அதிகாரி குழந்தைகள் நடவடிக்கைகள் அலுவலகத்திற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது பிள்ளை பராமரிப்பு மற்றும் பிள்ளை பராமரிப்பு துறையில் செயல்படுகிறது. ஒரு அரச ஊழியத்தில், இது மேற்பார்வை அல்லது ஒரே கடமையில் இருக்கும் அரச அமைச்சின் திணைக்களத்தின் தாபனம் அல்லது அதிகாரத்தில் அதிகாரி அல்லது ஒரு பொலிஸ் அதிகாரி இருந்தால் அல்லது;

(iii) இலங்கையில் அல்லது வேறு எந்த நாட்டிலும் பொருந்தும் சட்டத்தின் கீழ் ஒரு நபராக அது தீர்மானிக்கப்பட்டால் அல்லது பிரகடனப்படுத்தப்பட்டிருந்தால் அல்லது ;

(iv) இலங்கையில் அல்லது வேறு எந்த நாட்டிலிருந்தோ அல்லது நீதிமன்றத்தினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள சிறைத் தண்டனைக்கு கீழ் இருந்த அல்லது கீழ் இருக்கும் ஒருவராக இருந்தால் அல்லது;

(v) சிறுவர் துஷ்பிரயோகம் அல்லது துஷ்பிரயோக குற்றச்சாட்டு பெற்று நீதிமன்றத்தின் மூலம் நபர் விடுதலை செய்யப்படாமல் இருந்தால் அல்லது ஒரு முறையான விசாரணை பிறகு;

(vi) இலங்கையில் அல்லது வேறு எந்த நாட்டிலும் பொருந்தும் ஒரு சட்டத்தின் கீழ் விசுவாசமற்றவராக அறிவிக்கப்பட்டுள்ள எவரும் அல்லது;

(vii) குழுவின் உறுப்பினராக அவரது கடமையை நிறைவேற்றுவதற்காக பேரழிவு தரக்கூடிய தாக்கத்தை ஏற்படுத்தும் எந்தவொரு நிதி அல்லது பிற உறவு இருந்தால் அல்லது;

அவர் குழுவில் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்தும் நடாத்திச் செல்லுவதற்கும் தகுதியற்றவராவார்.

(ஆ) குழுவின் தலைவர், செயலாளர், பொருளாளர் இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும். அங்கத்தவரின் மூன்று நபராவது பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையம் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவிற்குள் பதிவாளராக இருத்தல் வேண்டும்.

(இ) குழுவின் உறுப்பினர்களின் இரண்டு நபராவது பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்திற்கு சமூகமளிக்கும் பிள்ளைகளின் பெற்றோராக இருப்பதுடன் பிரதான பெண் பொறுப்பாளர் குழுவின் செயலாளராக இருத்தல் வேண்டும்.

(2) அவ்வப்போது அமைச்சரால் வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகின்ற 8 ஆவது பந்தியில் (ஆ), (இ) மற்றும் (ஈ) பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு சபையின் விதிகள் வடி விதிக்கப்பட்ட தர நிலைகளை பின் பற்றி பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையம் நடாத்திச் செல்ல வேண்டும்.

11. ஆணையாளருக்கு விண்ணப்பம் கிடைத்தவுடன் அல்லது அங்கீகாரம் பெறாமல் பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையம் நடாத்திச் செல்லப்படுகின்றது என்று முறைப்பாடு கிடைத்தவுடன் அல்லது நன்னடத்தை உத்தியோகத்தர் அல்லது ஆணையாளரால் அதிகாரம் அளிக்கும் வேறு உத்தியோகத்தர் கீழ்க் குறிப்பிடப்பட்ட விடயம் சம்பந்தமாக நாலு வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று குறிப்பிட வேண்டும். அறிக்கை பெற்றுக் கொள்ளல்.

(அ) அந்த பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தின் பிள்ளைகளின் உச்சபட்சம் நலன் மற்றும் பாதுகாப்பு அதன் பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தின் மூலம் திருப்தியாக உள்ளதா சம்பந்தமாக மற்றும்

(ஆ) 10 (1) மற்றும் 10 (2) ஆவது உப பிரிவின் கீழ் செய்யப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் முறன்பாடற்றதாக வேலை செய்து உள்ளதா என்பது சம்பந்தமாக

(i) 10 (2) ஆம் உப பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட தரத்தில் நூற்றிக்கு ஐம்பது சத வீதமாவது பூர்த்தியாக இருத்தல் வேண்டும்.

(ii) மீதியான தரம் தேவைகள் பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையம் பதவு செய்யப்பட்டதன் பின் இரண்டு வருடங்கள் முடியும் முன் பூர்த்தி செய்வதாக அந்தப் பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தின் செயலாளரால் ஆணையாளருடன் ஒப்பந்தம் செய்ய வேண்டும்.

12. 11 ஆவது பிரிவின் கீழ் அறிக்கை கிடைத்தன் பின் அங்கே தரித்திருக்கும் பிள்ளைகளுக்கு நலன் மற்றும் பாதுகாப்பு அந்த பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தின் மூலம் வழங்கப்பட்டதா மற்றும் எதிர்பார்த்த தரத்திற்கு ஏற்ப செயல்பட்டுள்ளதா என்பதை விசாரணை செய்வதற்காக தேவையான சந்தர்ப்பத்தில் அந்த பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்திற்கு உட்செல்லுவதற்கு ஆணையாளருக்கு அல்லது அவரால் அங்கீகாரம் செய்யப்பட்ட உத்தியோகத்தருக்கும் செல்ல முடியுமாகும். பரிசோதனை செய்தல்.

13. 12 ஆவது பிரிவின் கீழ் உள்ள விசாரணையின் பின் ஆணையாளரால் நியாயமாக திருப்தியடைய முடியுமானால் விண்ணப்பப்பத்திரம் சமர்ப்பித்து ஆறு மாதத்திற்குள் அந்த பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தை பதிவு செய்வதற்கு ஆணையாளரால் செயல்பட வேண்டும். பதிவு செய்தல்.

14. (1) பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தை பதவி செய்தல் சம்பந்தமாக உரிய படிவத்தில் பதிவு செய்யும் சான்றிதல் உரிய கட்டத்தை செலுத்தியதன் பின் ஆணையாளரால் பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு பதிவு செய்யும் அனைத்து சான்றிதழும் இரண்டு வருடங்கள் செல்லுபடியாகும். பதிவு செய்தல் சான்றிதழ் வழங்குதல்.

(2) 11 (ஆ) ii ஆம் பிரிவின் ஒப்பந்தம் செய்யும் சந்தர்ப்பத்தில் ஆறு மாத காலங்களுக்காக செல்லுபடியாகும் தற்காலிக பதிவு செய்யும் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(3) (1) மற்றும் (2) ஆவது உப பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள எந்தவொரு சான்றிதழும் வேறு எந்த நபருக்கும் மாற்றப்படாமல் அத்தகைய மாற்றம் பூஜ்ஜியமாகவும் திறமையற்றதாகவும் இருக்க வேண்டும்.

(4) (1) மற்றும் (2) ஆவது உப பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு சான்றிதழும் அந்த சான்றிதழ் மூலம் அதிகாரத்தை வழங்கப்பட்ட நபர் மூலம் பிரதான அலுவலகத்தில் அல்லது பகலில் பராமாரிப்பு நிலையத்தை நடாத்திச் செல்லும் நிலையத்தின் எல்லா சந்தர்ப்பத்திலும் பார்வைக்கு இடப்பட வேண்டும்.

(5) தம்மால் தற்காலிகமாக பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் அல்லது வழங்குவதன் மூலம் பதிவு செய்யப்பட்ட அனைத்து பகலில் பிள்ளை பராமரிப்பு நிலைய சம்பந்தமாக அந்த பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தின் பெயர், விலாசம் பதிவு செய்யப்பட்ட இலக்கமும் திகதியும் மற்றும் ஆணையாளருக்கு தேவை என்று நினைக்கும் வேறு தகவல்கள் இருப்பின், அவைகள் அடங்கிய ஆவணம் ஆணையாளரால் நடாத்திச் செல்லல் வேண்டும்.

(6) ஆணையாளரால் (1) மற்றும் (2) ஆவது உப பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தை சம்பந்தமான அறிக்கை தேவைப்படும் சந்தர்ப்பங்களில் சபைக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

*பதிவு செய்யும் விண்ணப்பப் பத்திரத்தில் விபரத்திலுள்ள ஏதேனும் மாற்றம் ஆணையாளருக்கு அறியப்படுத்தப்பட வேண்டும்.*

15. இந்த சாசனத்தின் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ் உடைய எல்லா நபர்களாலும் இந்த சாசனத்தின் கீழ் பதிவு செய்வதற்கான தன்னுடைய விண்ணப்பப்பத்திரத்தில் உட்பட்ட விபரங்களை ஏதேனும் மாற்றங்கள் ஏற்படின் மாற்றம் சம்பந்தமாக அது ஏற்பட்ட முப்பது நாட்களுள் ஆணையாளருக்கு அறியப்படுத்த வேண்டும்.

*பத்திரத்தை புதுப்பித்தல்.*

16 (1) இந்த சாசனத்தின் கீழ் வழங்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்

(அ) நடைமுறையில் இருக்கும் கால எல்லை முடிவடைவதற்கு மூன்று மாததிற்கு முன் கால எல்லைக்குள் பதிவு செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் ஏதேனும் மாற்றம் செய்வதற்கு இருப்பினும் அதை உட்புகுத்தி குறிப்பிட்ட படிவத்துடன் விண்ணப்பப்பத்திரம் மூலம் பதிவை புதுப்பிப்பதற்காக ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுக்க வேண்டும்.

(ஆ) தீர்மானிக்கப்பட்ட தரத்திற்கு பொருத்தமானது என்று ஆணையாளர் திருப்தியடைந்தால் உரிய கட்டணத்தை செலுத்திய பின் பதிவை புதுப்பித்து கொடுத்தல் வேண்டும்.

(2) இந்த சாசனத்தின் கீழ் வழங்கப்பட்ட தற்காலின பதிவு செய்யும் சான்றிதழ்

(அ) செல்லுபடியாகும் கால எல்லை முடிவடைவதற்குள் ஒரு மாத்திற்கு முன் கால எல்லைக்குள் பதிவு செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களில் ஏதேனும் மாற்றம் செய்ய இருந்தால் அதை உட்புகுத்தி குறிப்பிட்ட படிவத்தின் படி விண்ணப்பப்பத்திரம் மூலம் தற்காலிக பதிவு செய்வதை புதுப்பித் தலுக்காக ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுக்க வேண்டும்.

(ஆ) தீர்மானிக்கப்பட்ட தரத்திற்கு பொருத்தமாவதற்கு தேவையான சான்று சம்பூர்ணம் செய்து அதன் முன்னேற்றத்தை காட்டுவதாக ஆணையாளர் திருப்தியடைந்தால் ஆறு மாதத்திற்கு செல்லுபடி ஆகும் என்று தற்காலிக பதிவு செய்வதை புதுப்பித்து கொடுத்தல் வேண்டும். இவ்வாறு ஒப்பந்தம் செய்த கால எல்லைக்குள் தற்காலிக பதிவு செய்வதை ஆறு மாதத்திற்குள் ஒருமுறை புதுப்பிப்பதற்கு செயல்பட வேண்டும்.

*ஆணையாளரின் அதிகாரம்.*

17. (1) இச் சாசனத்தின் ஏற்பாடுகளுக்கு கீழ், தன்னால் பதிவு செய்த பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையம் சம்பந்தமாக ஆணையாளருக்கு பின்வருமாறு அதிகாரம் இருக்க வேண்டும்.

(அ) தினத்தில் ஏதேனும் நிலைப்படுத்தத்தக்க நேரத்திற்குள் பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையம் நடாத்திச் செல்லும் இடத்துக்குள் சென்று அதனை பரிசோதனை செய்ய வேண்டும்.

(ஆ) மாகாணத்திற்குள் ஏதேனும் பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தின் செயலாளருக்கு அறிக்கை மற்றும் தகவல் சமர்ப்பிக்க வேண்டும் என்று நியமித்தல்.

(இ) மாகாணத்திற்குள ஏதேனும் பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தை பதிவு செய்தல்

(ஈ) ஆணையாளர் நியாயமான திருப்தியடைந்தால் பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தின் பராமரிப்பு செயல்களுக்காக தேவையான சந்தர்ப்பத்தில் உதவி பெற்றுக் கொடுத்தல்.

(உ) பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தின் பெண் பொறுப்பாளர்களுக்காக கருத்தரங்கு வேலை அரங்கு மற்றும் பயிற்சி வேலைத் திட்டம் செயல்படுத்துதல்.

(2) இந்த சாசனத்தின் ஏற்பாடுகள் வினைத்திறனுள்ளதாக செயற்படுத்துவதற்காக இந்த சாசனத்தின் மூலம் ஆணையாளருக்கு அளிக்கப்பட்டள்ள அதிகாரத்தின் ஏதேனும் அதிகாரம் தமக்கு கீழ் சேவை செய்யும் ஏதேனும் உத்தியோகத்தருக்கு பகிந்தளித்தல் தேவை என்று ஆணையாளரால் உத்தேசித்தால் ஆணையாளரால் அவ்வாறான ஏதேனும் அதிகாரம் கொண்ட ஒரு உத்தியோகத்தருக்கு ஒப்படைக்க முடியும்.

18. (1) இந்த சாசனம் செயற்படுத்தப்பட்ட திகதியிலிருந்து மற்றும் இனி மேலும் இந்த சாசனத்தின் கீழ் வழங்கப்பட்ட உத்தரவுச் சீட்டின் அதிகாரத்தின் கீழும் அதன் உத்தரவு மற்றும் நிபந்தனைகளுக்கு பொருத்தமற்ற யாதொரு நபரால் பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையம் அமைத்தல் அல்லது நடாத்திச் செல்லுதல் கூடாது.

*பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் இன்றி பகலில் பராமரிப்பு நிலையத்தை நடாத்திச் செல்ல முடியாமை.*

(2) இந்த சாசனத்தை செயல்படுத்தும் திகதிக்கு முன் பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தை நடாத்திச் செல்லுதல் யாதொருவராலும் இந்த சாசன செயல்படுத்தும் திகதியிலிருந்து ஆறு மாத கால எல்லைக்குள் முடியாது அதனை நடாத்திச் செல்ல முடியும் என்றாலும் அதன் ஆறு மாதம் காலம் முடிவடையும் முன் பதிவு செய்வதற்காக விண்ணப்பித்து இந்த சாசன ஏற்பாடுகளின் கீழ் சான்றிதழ் பெற்றுக் கொள்ள வேண்டும்.

19. 11 ஆவது பிரிவின் கீழ் உடைய அறிக்கை கிடைத்த பின் 12 ஆவது பிரிவின் கீழ் நடாத்தப்படும் விசாரணையின் இடையில் 10 (1) மற்றும்10(2) ஆவது பிரிவின் கீழும் தேவையான பூர்த்தி செய்யப்படாத என்று நிரூபிக்கப்பட்டால் அந்த பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையம் பதிவு செய்வதற்கு முடியாது என்று ஆணையாளரால் குழுவின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படல் வேண்டும்.

*பதிவு செய்வது நிராகரிக்கப்படல்.*

20. ஆணையாளரால் வழங்கப்பட்ட பதிவை நிராகரிக்கும் அறிவிப்பு சம்பந்மாக திருப்தியடையாத யாதேனும் பகலில் பிள்ளை பராமரிப்புநிலையத்தின் செயலாளருக்கு அந்த அறிவித்தல் திகதியிலிருந்து பதின்நான்கு நாட்களுக்குள் (இனிமேல் "அமைச்சு செயலாளர்", எனறு அறிமுகப்படுத்தப்படும்) மாகாண விடயத்திற்கு பொறுப்பான அமைச்சு செயலாளருக்கு முறையீடு சமர்ப்பிக்க முடியும்.

*அமைச்சின் செயலாளருக்கு முறையீடு சமர்ப்பிக்க முடியும்.*

21. (1) அமைச்சு செயலாளரால் அல்லது அவரால் நியமிக்கப்படும் ஆணையாளரின் பதவிக்கு சமமான அல்லது ஆணையாளரின் பதவிக்கு மேலாக உயர் பதவி வகிக்கும் அரச உத்தியோகத்தர் இரண்டு பேர் அல்லது அவ்வாறான பதவியிலிருந்து ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர் இரண்டு பேர் கொண்ட குழுவால் விசாரணை நடாத்த முடியும்.

*முறையீடு சம்பந்தமான அமைச்சின் தீர்மானம்*

(2) விசாரணையில் தீர்மானம் பின்வருமாறு இருக்க வேண்டும்.-

(அ) பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையம் பதிவு செய்வதை நிராகரித்த சம்பந்தமான காரணம் அந்த பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவித்தல்.

(ஆ) பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையம் பதிவு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கும்படி ஆணையாளருக்கு அறிவித்தல்.

(இ) 10(1) மற்றும் 10(2) ஆவது உட்பிரிவுகளின் கீழ் பந்திகள் மற்றும் துணை பந்தியின் கீழ் தேவைகளை அடைய பிரிவில் குறிப்பிட்ட தேவைகளை பூர்த்தி செய்வதற்கு ஒரு வருடத்திற்கு குறையாமல் சலுகை கால எல்லை பெற்றுக் கொடுத்தலும் அவ்வாறு பூரணப்படுத்துவதாயின் அதற்கு பின் பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையம் பதிவு செய்வதை அங்கீகரிக்கும் படி ஆணையாளருக்கு அறிவிக்க வேண்டும்.

அமைச்சருக்கு முறையீடு சமர்ப்பிக்க முடியும்.

22. 21 ஆவது பிரிவின் கீழ் கொடுக்கப்பட்ட தீர்மானம் சம்பந்தமாக திருப்தி அடையாத தரப்பினர் ஒருவரால் அந்த தீர்மானத்தின் திகதியிலிருந்து பதின்நான்கு நாட்களுக்குள் அமைச்சருக்கு முறையீடு ஒன்று சமர்ப்பிக்க வேண்டும்.

முறையீடு சம்பந்தமான அமைச்சின் தீர்மானம்.

23. 22 ஆவது பிரிவின் கீழ் முறையீடு கிடைத்த உடன் அமைச்சின் செயலாளரின் பதவிக்கு சமமான அல்லது அதற்கு மேல் உயர் பதவி வகிக்கும் அரச உத்தியோகத்தர் இரண்டு பேர் அல்லது அவ்வாறான பதவி வகித்து ஓய்வடைந்த அரச ஊழியர் இரண்டு பேர் கொண்ட குழுவால் அந்த முறைப்பாடு சம்பந்தமாக விசாரணை நடாத்தப்பட வேண்டும் என்று அந்த விசாரணையின் அறிக்கையின்படி அமைச்சரால் 21(2), (அ), (ஆ) அல்லது (இ) உப பிரிவின் படி தனது தீர்மானத்தை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

செயலாளர் குழுவுக்காக செயல்பட வேண்டும்.

24. பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்திற்கு உட்பட்ட சகல விடயம் சம்பந்தமாக திணைக்களத்துடன் செயல்பட ஆற்றல் உடைய ஒருவர் பகலில் பிள்ளை பராமரிப்புநிலையத்தின் செயலாளர் ஆகும்.

## III ஆம் பிரிவு

## பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தின் நிருவாகம் மற்றும் அதற்குரிய மற்ற காரணிகள்

அறிவுரை பின்பற்றுதல் வேண்டும் என்று கட்டளையை செயற் படுத்த வேண்டும்.

25. பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தின் இருக்கின்ற பிள்ளைகளின் நலன் அல்லது அதன் நிர்வாகம் சம்பந்தமாக ஆணையாளர் அல்லது அவரால் அதிகாரத்தை ஒப்படைத்த வேறு உத்தியோகத்தரால் அல்லது கொடுக்கப்பட்ட அறிவுரையை அல்லது கட்டளை அந்த பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தின் செயலாளர், குழு மற்றும் செயற்பாட்டு சபையை பின்பற்றுதல் அல்லது செயல் படுத்தப்பட வேண்டும்.

தகவல் அல்லது அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

26.(1) ஆணையாளர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட வேறு உத்தியோகத்தரால் எழுத்து மூலம் அறிவித்தலின் மூலம் அந்த அறிவிப்பில் குறிப்பிட்ட கால எல்லைக்குள் யாதேனும் தகவல் அல்லது அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தின் செயலாளருக்கு குறிப்பிடப்பட வேண்டும்.

(2) அந்த தகவல் அல்லது அறிக்கை சமர்ப்பிக்கும் போது பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தின் செயலாளரால் பிழையான அல்லது தவறான தகவல் அளிப்பதை தடுத்தல் வேண்டும்.

## IV ஆம் பிரிவு

## பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தை பதிவு செய்வதை இரத்துச் செய்தல்

பதிவு செய்வதை இரத்து செய்தல்.

27. பின்வரும் சந்தர்ப்பங்களில் ஆணையாளரால் விசாரணை நடாத்தும் சந்தர்ப்பத்தில் ஆணையாளரால் நியாயமாக திருப்தியடைந்தால் இந்த சாசனத்தின் கீழ் வழங்கப்பட்ட பதிவு செய்யும் சான்றிதழை இரத்துச் செய்வதற்கு முடியும்.

(அ) பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களின் வாக்களிப்பில் அந்த பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தை நடாத்திச் செல்வதற்கு முடியாது என்று பிரேரணை அங்கீகரிக்கப்பட்டு அதைப் பற்றி எழுத்து மூலம் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில்,

(ஆ) சான்றிதழ் வைத்திருப்பவர் அல்லது செயற் குழுவினால் அல்லது பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தின் அலுவலக குழுவினால் இந்த சாசனத்தின் அல்லது அதன் கீழ் தயாரிக்கப்பட்ட ஏதேனும் கட்டளை அல்லது ஒரு ஒழுங்கு அல்லது விதி அல்லது ஒழுங்குமுறை மீறிய படிக்கு அல்லது ஆணையாளரால் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கொடுக்கப்படும் அறிவுரை அல்லது கட்டளையை நடைமுறைப்படுத்துவதை புறக்கணிக்கப்படுதல் அல்லது பொய்யான தகவல் சமர்ப்பித்து இருக்கும் என்று ஆணையாளர் திருப்தியடைந்தால் உண்மைகள் வழங்கும் சந்தர்ப்பம் சான்றிதழ் வைத்திருப்பவருக்கு பெற்றுக் கொடுத்தன் பிறகு

(இ) மேற் 14(2) ஆவது உட்பிரிவின் கீழ் தற்காலிக பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் 11 (ஆ) (ii) துணை பந்தியின் கீழ் ஆணையாளருடன் ஒப்பந்தம் செய்த காலம் காலாவதியாகிவிட்ட போதிலும், எதிர்பார்த்த தரநிலை பூர்த்தி செய்யாத சந்தர்ப்பத்தில்

28. 27(அ), (ஆ) மற்றும் (இ) ஆவது பிரிவின் கீழ் யாதேனும் பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தின் பதிவு செய்வதை இரத்துச் செய்வதற்கு ஆணையாளரால் தீர்மானம் எடுக்கும் சந்தர்ப்பத்தில் அவரால் அந்த தீர்மானத்தை எடுத்த திகதி முதல் முப்பது நாட்களுக்குள் அதைப் பற்றி பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தின் செயலாளருக்கு பதிவுத் தபாலின் மூலம் அறிவிக்க வேண்டும். பதிவு இரத்து செய்வதற்கான அறிவித்தல்

29. ஆணையாளரால் வழங்கப்பட்ட பதிவு செய்வதை இரத்து செய்வதற்கான அறிவிப்பு சம்பந்தமாக திருப்தியடையாத யாதேனும் பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தின் செயலாளருக்கு அந்த அறிவித்தலின் ஏழு நாட்களுக்குள் அமைச்சகத்தின் செயலாளருக்கு முறையீடு ஒன்று அனுப்ப முடியும். அமைச்சு செயலாளருக்கு முறையீடு சமர்ப்பிக்க

30. (1) 29 ஆவது பிரிவின் கீழ் உள்ள முறையீடு அமைச்சு செயலாளருக்கு கிடைத்த சந்தர்ப்பத்தில் அவரால் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட ஆணையாளரின் பதவிக்கு சமமான அல்லது ஆணையாளரின் பதவியை விட உயர் பதவி வகிக்கும் அரச ஊழியர் இரண்டு பேர் அல்லது அவ்வாறான பதவி வகித்து ஓய்வு பெற்ற அரச ஊழியர் இரண்டு பேர் கொண்ட குழுவால் நடாத்தப்பட்ட விசாரணையின் பின் அமைச்சு செயலாளரினால் பின்வரும் செயல்முறைகளில் ஒன்று தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டும். முறையீடு சம்பந்தமாக அமைச்சு செயலாளரின் தீர்மானம்

(அ) பதிவு ரத்து செய்யப்படுவதை உறுதிப்படுத்தல்

(ஆ) பதிவுகளை ரத்து செய்ய ஆணையாளர் முடிவு இரத்து செய்யப்பட வேண்டும்.

(2) அமைச்சு செயலாளரினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை ஆணையாளருக்கு பிரதியுடன் முறையீடு கிடைத்த நாளில் இருந்து மூன்று மாதத்திற்குள் பகலில் பிள்ளை பராமரிப்புநிலையத்தின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

31. 30(1) ஆவது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட தீர்மானம் சம்பந்தமாக ஒரு திருப்தி அடையாத பங்குதாரரால் அந்த தீர்மானத்தின் திகதியில் இருந்து ஏழு நாட்களுள் இறுதியான முடிவுக்காக அமைச்சருக்கு முறையீடு ஒன்று சமர்ப்பித்தல் வேண்டும். அமைச்சருக்கு முறையீடு சமர்ப்பிக்க முடியும்

32. 31 ஆவது பிரிவின் கீழ் முறையீடு கிடைத்தவுடன் அமைச்சு செயலாளரின் பதவிக்கு சமமான அல்லது அதை விட உயர் பதவி வகிக்கும் அரச ஊழியர் அல்லது அவ்வாறான பதவி வகித்து ஓய்வு பெற்ற அரச ஊழியர் இரண்டு பேர் கொண்ட குழுவால் அந்த முறையீடு சம்பந்தமாக விசாரணை நடாத்தப்பட வேண்டும் என்றும் அந்த விசாரணையில் அறிக்கையின் படி அமைச்சரால் 30(அ) அல்லது (ஆ) பந்தியின் கீழ் தன்னுடைய முடிவை ஆணையாளருக்கு பிரதியுடன் முறையீடு கிடைத்த நாளிலிருந்து மூன்று மாதத்திற்குள் பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறியப்படுத்த வேண்டும். முறையீடு சம்பந்தமாக செயலாளரின் முடிவு

## V ஆம் பிரிவு

### பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தின் தரநிலைகளை அமைத்தல்

33. பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையம் நாடத்திச் செல்லும் கால எல்லை பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தின் வளாகத்தில் உடல் ரீதியான வசதிகள், குழந்தைகள் வேலைத்திட்டம் அறிக்கை நடாத்திச் செல்ல குறைந்த அலுவலக குழு மற்றும் குழந்தைகளின் நலன்களுக்கான தரநிலைகளை நிர்ணயிக்கும் நோக்கில், அத்தகைய தரங்களை ஒழுங்கு படுத்துவதற்கான விதிகள் குழு அமைக்க வேண்டும். குழுவால் தரநிலை சம்பந்தமான விதிகள் அமைக்க வேண்டும்

34. பகலில் பிள்ளை பராமரிப்புநிலையத்தில் அலுவலக குழுவின் ஒவ்வொரு பதவிக்காக விதிகள் மூலம் விதிக்கப்பட்ட தேவையான குறைந்தபட்ச தகுதி இருந்தால் தவிர, ஒரு நபர் பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்திற்கு அந்த பதவிக்கு நியமிப்பதற்காக எந்தவொரு நபரும் ஒரு தகுதி வாய்ந்தவராக இருக்க வேண்டும். அலுவலக குழுக்காக தகுதி

அலுவலக குழுக்காக பதிவு ஏடு நடாத்திச் செல்லல்

35. இந்தச் சாசனத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சகல பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையங்களில் அலுவலக குழுவின் பெயர் மற்றும் தகுதி உட்பட்ட பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தில் பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையங்களில் அலுவலக ஊழியர்களுக்காக பதிவு ஏடு ஆணையாளரால் நடாத்திச் செல்ல வேண்டும்.

அலுவலக குழு பயிற்சி பாடநெறி நடாத்தும் நிறுவனம் நடாத்திச் செல்லல்

36. ஆணையாளரால் பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையங்களில் அலுவலக குழுவுக்காக பாடநெறி அல்லது பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துகின்ற ஒரு நிறுவனம் தன்னில் தான் பராமரிக்கப்பட வேண்டும்.

வேண்டும் நடாத்திச் செல்ல பதிவு ஏடு தாபனம் பற்றிய தனியார் கல்வி நடாத்தப்படும் பயிற்ச்சி பாடநெறி அலுவலக குழுக்காக

37. 36 ஆவது பிரிவின் கீழ் நிறுவப்பட்ட நிறுவனத்தால் நடத்தப்படும் பாடநெறி பதிலாக அல்லது அந்த பாடநெறிக்கு மேலதிகமாக பகலில் பிள்ளை பராமரிப்பு நிலையங்களில் அலுவலக குழுவின் உறுப்பினர்களுக்கு படிப்பது பொருத்தமானது குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாடநெறி அல்லது பயிற்சி பாடநெறி நடாத்தும் தனியார் கல்வித் தாபனங்களின் பெயர் மற்றும் பாடநெறியின் தகவல் உள்ளடக்கிய பதிவு ஏடு ஆணையாளரால் நடாத்திச் செல்ல வேண்டும்.

## VI ஆம் பிரிவு

## குற்றங்கள் மற்றும் தண்டனை

குற்றம்

38. யாதொரு நபரால் அல்லது ஒரு தனிப்பட்ட குழுவால்

(அ) இந்த சாசனத்தின் ஏற்பாடுகளையும் மீறுதல் செயல்படுதல் சாசனத்தின் நோக்கங்களுக்கு மாறாக நிதியளித்தல் பணத்தை தவறாக பயன்படுத்துதல்

(ஆ) இந்த சாசனத்தின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கட்டளைப்படி அனுப்ப வேண்டிய ஏதாவது தகவல் அல்லது அறிக்கை அனுப்புவதை புறக்கணித்த சந்தர்ப்பத்தில்

(இ) அளிக்கும் தகவல்கள் அல்லது அறிக்கையில் வேண்டும் என்றே பொய்யான தகவல் சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில்

(ஈ) இந்த சாசனத்தின் ஏற்பாடுகள் அல்லது அதன் கீழ்செய்யப்பட்ட ஏதேனும் கட்டளை அல்லது கட்டளைகளுக்கு முறன்பாடாக செயல்படுதல் புரக்கணித்த சந்தர்ப்பத்தில்யாதொரு நபரால் அல்லது தனிப்பட்ட குழுவால் ஒவ்வொரு உறுப்பினர்களும் இந்த சாசனத்தின் கீழ் குற்றத்திற்கு குற்றவாளியாவார்

தண்டனை

39. இந்த சாசனத்தின் கீழ் குற்றம் செய்யும் ஒருவர் அதற்காக வேறு ஒரு சட்டம் குறிப்பிட்ட தண்டனையை வழங்கவில்லை என்றால் குற்றத்திற்கு குற்றவாளி ஆவதுடன் நீதவான் குற்றத்திற்கு குற்றவாளி சுருக்கமான விசாரணைக்குப் பிறகு தண்டிக்கப்பட்ட போது 25,000.00 ரூபாவுக்கு குறையாத அபராதம் அல்லது 03 மாதங்களுக்கு மேல் இல்லாத காலத்திற்காக இரு வகையில் ஒரு முறையில் சிறைக்கைதியாக இல்லாவிட்டால் அந்தத் தண்டனையை அல்லது சிறையில் அடைத்தல் என்னும் இரண்டிலுமாவது அந்த நபர் கீழ்ப்படிய வேண்டும்.

## VII ஆம் பகுதி

## பொது ஏற்பாடுகள்

கட்டளை உருவாக்க அமைச்சருக்கு உள்ள அதிகாரம்

40. (அ) இந்த சாசனத்தின் ஏற்பாடுகளை செயல்படுத்துவதற்கு மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரால் கட்டளை உருவாக்க முடியும்

(ஆ) அமைச்சரால் உருவாக்கப்பட்ட சகல கட்டளைகளும் வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரப்படுத்த வேண்டும் என்பதுடன் அவை பிரசுரிக்கும் திகதி அல்லது உறுதியாக குறிப்பிட முடியுமான ஒரு பிந்தைய தேதியிலிருந்து அல்லது செயல்பட முடியும்.

(இ) அமைச்சரால் உருவாக்கப்பட்ட சகல கட்டளைகளும் அங்கீகாரத்திற்காக மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் கட்டளை அதன் அங்கீகார திகதியிலிருந்து சட்ட நீக்கம் செய்யப்பட்டதாக கவனிக்கப்பட்டன என்றாலும் அதன் கீழ் முன்பு செய்யப்பட்ட ஏதேனும் செயலுக்கு அதனால் பங்கங்கள் ஏற்படாதிருத்தல் வேண்டும்.

41. (அ) இந்த சாசனத்தின் வசனங்கள் பற்றி ஒரு வேறுபாடு தேவைப்பட்டால் கீழ் விதிகள் உருவாக்குவதற்கு குறிப்பிட்ட அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட ஏதேனும் காரணம் தொடர்பாக குழுவால் விதி உருவாக்கப்பட முடியும். விதிகள் உருவாக்குதல் குழுவின் சக்தி.

(ஆ) குழுவால் உருவாக்கப்படும் சட்ட அமைச்சரால் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டும் என்றும் அவ்வாறு பிரசுரிக்கப்படும் திகதி அல்லது குறிப்பிட முடியும் என்றால் பின் திகதிகளில் இருந்து அல்லது செயல்படுத்த முடியும்

42. இந்த சாசனத்தின் வசனம் தொடர்பாக வேறுபாடு தேவைப்பட்டால் "ஆளுநர்" என்று தென் மாகாண ஆளுநர் அவர்களின் கருத்து ஆகும். "அமைச்சு" என்பது தென் மாகாண சபையின் சமூக நல நோன்பல் நன்னடத்தை மற்றும் பிள்ளைகள் பாதுகாப்பு சேவை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் கருத்தாகும். "அமைச்சு செயலாளர்" என்பது தென் மாகாண சபையின் சமூக நலநோன்பல், நன்னடத்தை மற்றும் பிள்ளைகள் பாதுகாப்புச் சேவை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் செயலாளர் என்பது கருத்தாகும். "ஆணையாளர்" என்பது தென் மாகாண சபையின் சமூக நல நோன்பல் நன்னடத்தை மற்றும் பிள்ளைகள் பாதுகாப்புச் சேவை திணைக்களத்தின் ஆணையாளரின் கருத்தாகும். "திணைக்களம்" என்பது தென் மாகாண சபையின் சமூக நல நோன்பல் நன்னடத்தை மற்றும் பிள்ளைகள் பாதுகாப்பு சேவைத் திணைக்களம் என்பது கருத்தாகும்.

"மாகாணம்" என்பது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தெற்கு மாகாண சபை என்பது கருத்தாகும்.

"மாகாண சபை" என்பது 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபையின் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட தென் மாகாண சபையின் கருத்தாகும்.

"பிள்ளைகள்" என்பது வயது 4 மாதத்திலிருந்து 12 வயது வரை என்பது கருத்தாகும்

"விசேட தேவைகள் கொண்ட பிள்ளை" என்பது 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க குறைபாடுகள் பதிவுச் சட்டம், "குறைபாடுகள் நபர்" உள்ள நபர்களின் வயது 4 மாதங்களிலிருந்து 12 வயது வரை கொண்ட பிள்ளைகள் "நோக்கம்" என்பது இந்த சாசனத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள விதிமுறைகளால் குறிக்கப் படுகிறது. மற்றும் தமிழ் மொழி இடையில் ஏதாவது முரண்பாடுகள் ஏற்பட்டால் சிங்கள உரை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

43. இந்த சாசனத்தின் சிங்களம் மற்றும் தமிழ் மொழி இடையில் ஏதாவது முரண்பாடுகள் ஏற்பட்டால் சிங்கள உரை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். பொருத்தமற்றதாக ஏற்பட்டபோது சம்பந்தப்பட்டால் சிங்கள மொழி வரையறைகள் அவசியமாகும்.

03- 1163